செ.வெ.எண்: 82 நாள்:29.08.2016

## பத்திரிகைச்செய்தி

# புதுக்கோட்டை மாவட்ட காவிரி பாசனப்பகுதிக்கும் நெல் சாகுபடி விவசாயிகளுக்கு சம்பா தொகுப்புத் திட்டம்

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 18.08.2016 அன்று சட்டப் பேரவையில் 110 விதியின் கீழ் காவிரி பாசன மாவட்ட விவசாயிகளுக்கு சம்பா தொகுப்புத் திட்டம் ரூ.64.30 கோடி மதிப்பில் அறிவிக்கப்பட்டது. நடப்பாண்டு இத்திட்டத்தில் புதுக்கோட்டை மாவட்ட காவிரி டெல்டா பகுதி விவசாயிகளும் பயன்பெறுமாறு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் வடகிழக்கு பருவ மழையிலும் குறைவான மழை மற்றும் தேவையான அளவு தண்ணீர் மேட்டூர் அணையில் கிடைக்கப்பெறாத சூழ்நிலையிலும் காவேரிப் பாசன பகுதி விவசாயிகள் எவ்வித பாதிப்புக்கும் உள்ளாக கூடாது என்ற நோக்கத்தோடு இத்திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது.

**சம்பா தொகுப்புத் திட்ட உதவிகள்:**

- நேரடி நெல் விதைப்பு மேற்கொள்ள வசதியாக தரிசு நிலங்களில் உழவு மேற்கொள்ளும் பணிகளுக்கு ஏக்கருக்கு ரூ.500/- பின்னேற்பு மானியம்.
- தரமான சான்று பெற்ற உயர்விளைச்சல் நெல் ரக விதைகளுக்கு கிலோவிற்கு ரூ.10/- வீதம் மானியம்.
- நேரடி நெல் விதைப்பு மேற்கொண்ட பகுதிகளில் களைக் கட்டுப்பாடு மேற்கொள்ள வசதியாகக் களைக்கொல்லி பயன்படுத்திட ஏக்கருக்கு ரூ.250/- பின்னேற்பு மானியம்.
- துத்தநாகச் சத்துக் குறைபாட்டினை நிவர்த்தி செய்திட துத்தநாக சல்பேட் பயன்படுத்திட ஏக்கருக்கு ரூ.200/- பின்னேற்பு மானியம்.
- இயந்திரம் மூலம் நேரடி நெல் விதைப்பு மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.600/- பின்னேற்பு மானியம்.
- இயந்திரம் மூலம் நெல் நடவு செய்யும் விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.2000/- பின்னேற்பு மானியம்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் சம்பா தொகுப்புத் திட்டம் காவிரி பாசன பகுதிகளான அறந்தாங்கி, ஆவுடையார்கோவில், மணமேல்குடி, கறம்பக்குடி, கந்தர்வகோட்டை மற்றும் திருவரங்குளம் வட்டாரங்களில் செயல்படுத்தப்படவுள்ளது.

புதுக்கோட்டை மாவட்டத்திற்கு உழவு மானியம் 18000 ஏக்கர் பரப்பளவிலும், களைக்கட்டுப்பாட்டு மானியம் 12500 ஏக்கர் பரப்பளவிலும், துத்தநாக சல்பேட் மானியம் 3000 ஏக்கர் பரப்பளவிலும், விதைகளுக்கான மானியம் 200 மெ.டன் அளவிலும், இயந்திரம் மூலம் நேரடி நெல் விதைப்பு மானியம் 2000 ஏக்கர் பரப்பளவிலும், இயந்திரம் மூலம் நெல் நடவு மானியம் 1000 ஏக்கர் பரப்பளவிலும் ரூபாய் 183 லட்சம் மானிய மதிப்பில் செயல்படுத்தப்படவுள்ளது.

**தொழில் நுட்ப பயன்கள்:**

- நேரடி நெல் விதைப்பு மேற்கொள்ளப்படும் பகுதிகளில் விதைக்கும் முன்பு பொட்டாசியம் குளோரைடு கரைசல் கொண்டு விதையினை கடினப்படுத்தி விதைப்பதால் மழை தாமதம் ஆகும் சமயத்தில் மேலும் 10 நாட்களுக்கு வறட்சியை தாங்கி வளர உதவுகிறது. மேலும் நேரடி நெல் விதைப்பு செய்வதால் நாற்றங்கால் பராமரிக்கும் கால அளவு தவிர்க்கப்பட்டு தாமதமாக மழை கிடைத்தாலும் விதைகள் பழுது இன்றி முளைக்கும். கிடைக்கும் பருவ மழை மற்றும் வாய்க்கால் தண்ணீரைக் கொண்டு நேரடி நெல் சாகுபடி பயிரினை சீராக பராமரிக்கலாம். இதனால் தண்ணீர் தேவை குறைவதோடு மகசூல் இழப்பும் தவிர்க்கப்படுகிறது. விதைப்புக் கருவி கொண்டு விதைப்பு செய்வதால் பயிர் எண்ணிக்கை ஒரு சதுர மீட்டருக்கு 50 குத்துக்கள் கிடைப்பதால் நெல் மகசூல் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

..2..

- நேரடி நெல் விதைப்பில் களைகள் அதிகம் வர வாய்ப்புள்ளதால் விதைத்தவுடன் களைக்கொல்லி தெளித்து களையினை ஆரம்பத்தில் கட்டுப்படுத்தலாம். விதைத்து 20 நாட்கள் கழித்து முளைக்கும் இருஇலை பருவ களைகளை பிஸ்பைரிபேக் சோடியம் களைகொல்லியினை ஏக்கருக்கு 100 மிலி என்ற அளவில் தெளித்து கட்டுப்படுத்தலாம்.
- நெற்பயிரில் துத்தநாக நுண் சத்து பற்றாக்குறையினால் இலைகள் மஞ்சள் நிறமாக மாறி பச்சையத்தினை இழந்து மகசூல் குறைய வாய்ப்புள்ளது. இதனை நிவர்த்தி செய்திட துத்தநாக சல்பேட் ஏக்கருக்கு 10 கிலோ இடுவதால் பயிர் நன்கு செழித்து வளர்ந்து மகசூல் கூடும்.
- வேளாண் தொழிலாளர் பற்றாக்குறையினை சமாளித்து நெற்பயிரில் கூடுதல் மகசூல் பெற இயந்திர நெல் நடவு மேற்கொள்ளலாம். இம்முறையில் பயிர் எண்ணிக்கை சீராக பராமரிக்கப்பட்டு குறுகிய காலத்தில் அதிக பரப்பளவில் நடவு செய்யலாம்.

இத்தகைய தொழில்நுட்ப அம்சங்களை உள்ளடக்கி சம்பா தொகுப்பு திட்டம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் வடிவமைக்கப்பட்டு புதுக்கோட்டை மாவட்டத்தில் செயல்படுத்தப்படவுள்ளது.

சம்பா தொகுப்புத் திட்டத்தில் காவிரி பாசன பகுதி விவசாயிகள் பயன்பெறும் வகையில் செயல்படுத்தப்படும். குறிப்பாக சிறு, குறு, ஆதிதிராவிடர் மற்றும் மகளிர் விவசாயிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். இத்திட்டத்தில் பங்குபெறும் விவசாயிகள், ஒருங்கிணைந்த விவசாயிகள் கையேடு, சிட்டா அடங்கல், வாக்காளர் அட்டை, குடும்ப அட்டை, ஆதார் அட்டை போன்ற அடையாள அட்டைகளுடன் சம்பந்தப்பட்ட வேளாண்மை விரிவாக்க மையத்தில் உரிய படிவத்தில் விண்ணப்பித்தல் வேண்டும்.

காவிரி பாசன பகுதி விவசாயிகள் மேற்கொள்ளும் உழவுப் பணி, களைக்கொல்லி, துத்தநாக சல்பேட் பயன்படுத்துதல், விதைப்புக் கருவி மூலம் நேரடி நெல் விதைப்பு மேற்கொள்ளுதல் மற்றும் இயந்திரம் மூலம் நெல் நடவுப் பணிகள் ஆகிய இனங்களுக்கு உரிய ஆவணங்கள் மற்றும் புகைப்படங்களுடன் சம்பந்தப்பட்ட வேளாண்மை விரிவாக்க மையத்தில் விண்ணப்பிக்கக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

எனவே, காவிரி பாசன பகுதி விவசாயிகள் தங்கள் பகுதி வேளாண்மை விரிவாக்க மையத்தினைத் தொடர்புகொண்டு இத்திட்டத்தில் பங்குபெற்றுப் பயனடையுமாறு புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் விவசாயிகளை கேட்டுக்கொண்டுள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**